# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) - கோவை-18.

## தமிழ்த்துறை

முதுகலை முதலாமாண்டு தமிழ் இலக்கியம் - பாடத்திட்டம்

தாள் - II - இலக்கணம் - தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (18MTA12C)

### அலகு: 1

1. நூன்மரபு
2. மொழிமரபு

### அலகு: 2

3. பிறப்பியல்
4. புணரியல்

### அலகு: 3

5. தொகைமரபு
6. உருபியல்

### அலகு: 4

7. உயிர் மயங்கியல்
8. புள்ளி மயங்கியல்

### அலகு: 5

9. குற்றியலுகரப் புணரியல்

### பார்வை நூல்கள்!

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணம்), கழக வெளியீடு
2. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - ச. பாலசுந்தரம், பெரியார் பல்கலைக் கழக வெளியீடு.

REDMI NOTE 8 PRO

முதுகலை முதலாமாண்டு - தமிழ் இலக்கியம்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் : முதற்பருவம்

பாடக் குறியீட்டு எண் : 18MTA12C

அலகு-1 : 1. நூன்மரபு
2. மொழிமரபு

முனைவர். ந. மகாலட்சுமி
உதவிப் பேராசிரியர்.

REDMI NOTE 8 PRO

# அலகு: 1 - நூன்மரபு

மொழிக்கு அடிப்படையாய் அமைவது எழுத்து. தனித்தனியே நிற்கும் அவ்வெழுத்துக்களின் பல்வகை இலக்கணங்களையும் எடுத்துரைப்பதால் இம்முதலியல் நூன்மரபு எனப்பெயர் பெற்றது.

நூன்மரபால் அமைந்த நூற்பாக்கள் 33. இந்நூற்பாக்கள் கூறும் செய்திகளை எழுத்துக்களின் 1. தொகை வகை (எண்) 2. பெயர், 3. மாத்திரை அளவு, 4. வடிவு, 5. மெய்ம்மயக்கம் என்னும் ஐந்து பிரிவுகளைகப் பாகுபடுத்தலாம்.

## 1. எழுத்துக்களின் வகையும் பெயரும்:

அகரம் முதல் னகரத்தை இறுதியாக உடைய எழுத்துக்கள் முப்பது. இவற்றைச் சார்ந்து வருகின்ற இலக்கணத்தை உடைய மூன்று எழுத்துக்களும் அல்லாதவிடத்து முப்பது என்னும் எண்ணிக்கையைப் பெறும். சார்ந்து வரும் மரபினை உடைய எழுத்துக்கள் மூன்று. அவை 1. குற்றியலிகரம், 2. குற்றியலுகரம், 3. ஆய்தம் என்பன. இம்மூன்றும் முன்னர்ச்சொல்லப்பட்ட முப்பது (முதல்) எழுத்துக்களை ஒத்த தன்மை உடையன.

## 2. மாத்திரை அளவு:

அ, இ, உ, எ, ஒ எனும் ஐந்தும் ஒரு மாத்திரையளவு ஒலிக்கும் குற்றெழுத்துக்கள்

ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ எனும் ஏழும் இரண்டு மாத்திரையளவு ஒலிக்கும் நெட்டெழுத்துக்கள்.

ஓரெழுத்து மூன்று மாத்திரையளவு ஒலித்தல் தமிழில் இல்லை.

நீண்ட மாத்திரையையுடைய அளபெடை எழுதப்பெற வேண்டின், மேற்கூறிய இரண்டளபுடைய நெடிலையும் ஓர் அளபுடைய குறிலையும் கூட்டி எழுதுதல் வேண்டும். உயிர் எழுத்துக்கள் -12, மெய்யெழுத்துக்கள் -18.

மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் அரைமாத்திரையும், மகரக்குறுக்கம் அரைக்கும் குறைந்து ஒலிக்கும் என்பதைத் தொல்காப்பியர் கூறுவார்.

ஒலிகள் ஒலிக்கும் கால அளவே மாத்திரை எனப்படும்.

REDMI NOTE 8 PRO

1. இயல்பாகக் கண்ணை இமைப்பதற்கும், 2. கைவிரலை நொடிப்பதற்கும் ஆகின்ற கால அளவு மாத்திரை எனப்படும்.

3. வடிவு:

மகரக் குறுக்கத்திற்கு, மகர மெய்க்குரிய வடிவுடனே, உள்ளேயும் ஒரு புள்ளி பெறும்.

தனி மெய்யானது இயல்பு புள்ளியோடு நிற்றல்.

உயிர்மெய்யானது இயல்பு புள்ளியன்றி நிற்றல்.

எகர ஒகரங்களும் மேலே புள்ளிபெறும் அல்லவையவை உடையன (இவை முற்கால எழுத்து வடிவம்)

உயிர் மெய்யை ஒலிக்கும் போது மெய் முன்னும் உயிர் பின்னுமாக அமையும்.

க், ச், ட், த், ப், ற் - ஆறும் வல்லெழுத்து.
ங், ஞ், ண், ந், ம், ன் - ஆறும் மெல்லெழுத்து.
ய், ர், ல், வ், ழ், ள் - ஆறும் இடையெழுத்து.

4. மெய்ம்மயக்கம்:

பதினெட்டு மெய்யும் தம்மை மொழிப்படுத்தி வழங்கும் இயல்பு உரைதொடுத்து, மெய்ம் மயக்கம் என்றும், உடன்நிலை மயக்கம் என்றும் இரு வகைய ஆராயும் காலத்து.

ஒரு மெய்யெழுத்துப் பிற மெய்யெழுத்துக்களோடு சேர்ந்து நிற்பது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகும்.
(எ-டு) சேர்தல், நண்பன், திங்கள்.

ஒரு மெய்யெழுத்துத் தன்னோடு தானே நிற்பது உடனிலை மெய்ம்மயக்கமாகும்.
(எ-டு) காக்கை, பச்சை, வெம்மை.

வல்லின, இடையின மெய்ம்மயக்கம்:

ட், ற், ல், ள் என்னும் நான்கு எழுத்துக்களை அடுத்து க், ச், ப் என்னும் மூன்று மெய்யெழுத்துக்கள் வரும்.

(எ-டு) ட் → கட்க, கட்கிறார், கட்ப.
ற் → கற்க, கற்கிறார், கற்ப.
ல் → செல்க, செல்கிறார், செல்ப.
ள் → கொள்க, கொள்கிறார், கொள்ப.

REDMI NOTE 8 PRO

மேற்கூறப்பட்ட நான்கு எழுத்துக்களுள் 1. லகர 2. ளகரமாகிய மெய்களை அடுத்து யகர, வகர மெய்களும் வரும்.

(எ-டு) ல் – கோல்வளை
ள் – நாள்யாமம்

## மெல்லின மெய்ம்மயக்கம்:

மெல்லின எழுத்துக்களை அடுத்து அவற்றின் இனமாகிய வல்லெழுத்துக்கள் ஆறும் வரும்.

(எ-டு) வெண்கலம், புன்செய், பந்து, கம்பு, கன்று.

மேற்கூறப்பட்ட ஆறு மெல்லெழுத்துக்களுள். 1. ண், 2. ன் என்பவற்றிற்கு டகர, றகரமாகிய வல்லெழுத்தும் வரும். அவற்றுடன் க், ச், ஞ், ப், ம், ய், வ் எனும் ஏழ் எழுத்துக்களும் அடுத்து நிற்கும்.

(எ-டு) ண் – வெண்குடை, வெண்சாந்து, வெண்ஞாண், பண்பு, வெண்மை, மண்யாறு, மண்வெட்டி,
ன் – நான்கு, நன்செய், மென்ஞாண், அன்பு, மென்மை, இன்யாழ், பொன்வளது.

## சிறப்பு விதி:

1. ங், 2. ந், 3. ம், 4. வ் என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர் யகரமெய் நிற்கும் பொருண்மை உடைத்து.

(எ-டு) உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது.

2. மகரமாகிய புள்ளி முன்னர் (யகர யகரங்களையன்றி) வகரமும் தோன்றி மயங்கும்.

(எ-டு) வலம்வருதல், நிலம் வளது.

3. 1. ய், 2. ர், 3. ழ் என்னும் மெய்யெழுத்துக்களை அடுத்து மொழிக்கு முதலில் வருகின்ற ஒன்பது மெய்யெழுத்துக்களும் வரும். அவற்றுடன் மொழிக்கு முதலில் வராத ஙகரமும் வரும்.

ய் – ஆய்க, காய்சினம், காய்தல், தாய்பல, காய் ஞாயறு, மொய்நாள் தாய்மண், பேய்யாது, காய்வண்டி, வேய்ஙனம்,

ர் – கார்காலம், கூர்சில், கூர்தல், சார்பு, வேர் ஞான்றது வேர்நீண்டது, வேர்மண், வேர்யாது, வேர்வளது, வேர்ஙனம்.

ழ் – தாழ்குரல், பாழ்சிலை, தாழ்தல், வாழ்பயர், வீழ் ஞான்றது, வீழ்நன்று, வாழ்மனை, வீழ்யாது, ஊழ்வினை, வீழ்ஙனம்.

## உடனிலை மெய்ம்மயக்கம்:

பொருள் நிலைமைக் கருத்தின் கண், எல்லா மெய்யெழுத்தும் தம் முன்னே தாமே வந்து மயங்கும், ரகார ழகாரங்கள் அல்லாத இடத்து.

(எ-டு) காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, மண்ணை, தத்தை, வெந்நோய், அப்பை, அம்மி, வெய்யர், மல்லிகை, எவ்வி, கொள்ளி, கொற்றி, கன்னி.

1.அ, 2.இ, 3.உ என்பன மூன்றும் சுட்டெழுத்துக்களாகும்.

(எ-டு) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம்.

1.ஆ, 2.ஏ, 3.ஓ என்னும் அம் மூன்றும் வினாவும் பொருட்டு வரும் வினா எழுத்துக்களாகும்.

(எ-டு) அவனா, மெய்தானே, வருவானோ.

உயிரெழுத்துக்கள் தமக்குக் கூறிய மாத்திரை அளவைக் கடந்தும் ஒலிக்கும். ஒற்றெழுத்துக்கள் தமக்குக் கூறிய அரை மாத்திரையை விட நீண்டும் இசைக்கும். இந்நிலை இசையுடன் கூடிய நரம்பினை உடைய யாழிசை நூலின்கண் பொருந்தி வரும் என்று சொல்லுவர் புலவர்.

## வினாக்கள்

1. நான்மரபின் பெயர்க்காரணம் குறித்து ஆராய்க.
2. எழுத்துக்களின் வகைகளைத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
3. எழுத்துக்களின் கால, அளவு, மாத்திரை குறித்து எழுதுக.
4. சுட்டெழுத்து, வினாவெழுத்து விளக்குக.
5. சார்ந்துவரல் மரபின் மூன்றாவன யாவை?
6. 'முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன' என்பதில் எழுத்தோரன்ன என்று கூறியதேன்?
7. எழுத்துக்களின் பிற மரபுகளைத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

REDMI NOTE 8 PRO

8. முதலெழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் குறித்து தொல்காப்பியர் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

9. எழுத்துக்களின் வடிவம் குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?

10. மெய்ம்மயக்கம் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

11. தனி மெய்களின் மூவகைகளை விளக்குக.

---

REDMI NOTE 8 PRO
ந.மெகாலட்சுமி

# அலகு : 1 - மொழிமரபு

நூல்மரபால் கூறப்படுகின்ற எழுத்துக்களால் உண்டாவது மொழியாகும். பழங்காலந் தொட்டு வழங்கி வரும் தனிமொழிகளையும் அவற்றின் இடையில் நிற்கும் எழுத்துக்களின் மரபையும் வகைப்படுத்திக் கூறுவது மொழிமரபு. இவ்வியல் 49 நூற்பாக்களைக் கொண்டது.

மொழிமரபு கூறும் செய்திகளை 1. சார்பெழுத்துக்கள், 2. மொழிகளின் வகைகள், 3. எழுத்துக்களின் இயக்கம், 4. போலி, 5. மொழிமுதலெழுத்துக்கள், 6. மொழி இறுதி எழுத்துக்கள் என ஆறாகப் பாகுபடுத்தலாம்.

## 1. சார்பெழுத்துக்கள் :

### (i) குற்றியலிகரம் :

குற்றியலுகரச் சொல்லை அடுத்து யகர முதல் மொழி வந்தால் குற்றியலுகரம் மறைய அங்கு இகரம் தோன்றும். 'மியா' எனும் அசைச்சொல்லிலும் யகரத்துக்கு முன் இகரம் உளது. அந்த இகரம் குறைந்து ஒலிப்பதால் குற்றியலிகரம் எனப்படும். இங்ஙனம் தனிமொழியில் மட்டுமன்றி, இருசொற் புணர்ச்சியிலும் இகரம் குறுகுதலுண்டு.

(எ-டு) நாடு + யாது = நாடியாது, கேண்மியா, சென்மியா.

### (ii) குற்றியலுகரம்:

தனிக் குறில் தவிரப் பிற எழுத்துக்கள் தொடரும் சொற்களின் இறுதியில் வல்லினத்தை அடுத்து வரும் உகரம் குறுகி ஒலிக்கும். அது குற்றியலுகரம் எனப்படும்.

ஒரு மொழியன்றிப் புணர்மொழிக் கிடையேயும் குற்றியலுகரம் வரும்

(எ.டு) தேக்குக்கதவு, செக்குக்கணை, சுக்குக்கொடு.

### (iii) ஆய்தம் :

ஆய்தப்புள்ளி குற்றெழுத்தின் பின்னும் உயிர்மெய் வல்லெழுத்து ஆறனுக்கு முன்னுமாக வரும் (எ-டு) எஃகு.

இங்ஙனம் ஒருமொழிக் கண்ணேயன்றி, சொற்களின் ஈறு புணருமிடங்களிலும் ஆய்தமாக இசைக்கும் ஒலிப்புத் தோன்றும் (எ.டு) கஃறிது, முஃடீது.

ஒலிக்குறிப்பாக வரும் ஆய்தம் நிறத்தையும் ஓசையையும் குறிக்க அருகித் தோன்றும். அப்போது அவ்வாய்த ஒலி சுருங்காமல்

REDMI NOTE 8 PRO
AI QUAD CAMERA

அளபெடை போல நீண்டொலித்தாலும், அதனை எழுத்தால் எழுதிக் காட்டுவதில்லை.
(எ-டு) கஃறென்னும் கல்லதர் அத்தம்.

(iv) அளபெடைகள்:

செய்யுளில் ஓசை குறையும் போது நெட்டெழுத்துக்கள் தத்தமக்குரிய இனமொத்த குற்றெழுத்துக்களை அருகில் பெற்று அவ்வோசையை நிறைவு செய்யும்.

(எ-டு) தனி நெடில் : ஆஅ, ஈஇ, ஊஉ

உயிர்மெய் நெடில் : பெறாஅர், குரீஇ, தூஉய்

ஐ, ஔ இரண்டிற்கும் இனமொத்த குற்றெழுத்து இல்லையாதலால், முறையே இகரமும் உகரமும் இசையை நிறைவாக்க வரும்.

(எ-டு) ஐஇ, ஔஉ.

2. மொழிகளின் வகைகள்:

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் தோன்றும் சொற்கள் பல. அவை அனைத்தும் 1. ஓரெழுத்தால் ஆகும் ஒருமொழி, 2. இரண்டெழுத்தால் ஆகும் ஒருமொழி, 3. இரண்டிற்கும் மேற்பட்ட பல எழுத்துக்களைக் கொண்டு அமையும் தொடர்மொழி என மூன்றாகப் பாகுபடுத்தலாம்.

(எ-டு) ஆ, ஈ. – ஓரெழுத்து ஒருமொழி

கல், மண் – ஈரெழுத்து ஒருமொழி.

மயில், திங்கள், வள்ளுவர் – தொடர்மொழி.

நெட்டெழுத்துக்கள் ஏழும் ஓரெழுத்தொரு மொழிகள். குற்றெழுத்துக்கள் ஐந்தும் அங்ஙனம் ஓரெழுத்தொரு மொழிகளாக, நிறைவுபெற வருவதில்லை. சிற்சில வருமென்பதாம்.

(எ-டு) து – உண், நொ – துன்பப்படு.

3. எழுத்துக்களின் இயக்கம்

மெய்கள் அகர உயிரோடு சேர்ந்தே உச்சரிக்கப்படும். (எ-டு) ட, ர, ல. அவற்றை ஈகாரம், டகாரமெனத் தனியெழுத்தாகிய நிலையைக் கூறும்பொழுது எல்லா எழுத்தும் மெய்ம் மயக்க நிலைகளில் மாறிவரும். இது குற்றமில்லை.

ஈரொற்றுடனிலை:

ய, ர, ழ எனும் மூன்று ஒற்றுக்களின் பின் க, ச, த, ப, ங, ஞ, ந, ம என்ற எட்டு மெய்களும் வந்து ஈரொற்றுடனிலையாகும்.

(எ-டு) ய் – காய்க்கும், காய்ச்சல், வாய்ப்பு

ர் – பீர்க்கு, தேர்ச்சி, ஆர்ப்பு

REDMI NOTE 8 PRO
ந. மகாலட்சுமி

இறுதிக்கு வாரா எனப்பட்ட ரகர, ழகரம் இவ்விரண்டினை முதலாயவற்றின் பின் வருமென்பதாம்

(எ-டு) பர் – பகர், புழ் – புகழ்.

செய்யுளின் இறுதியில் நிற்கும் 'போலும்' எனும் சொல் அசைச்சொல் கருதி 'போன்ம்' எனத்திரிந்து ஈரொற்றுடனிலையாய் நிற்கும். இந்தச் சூழல் னகரத்தின் பின்னே நிற்கும் மகர ஒற்றுக் குறுகும்.

(எ-டு) உவமை கூத்தது போன்ம்.

4: போலி:

சொல்லிடைப் படுத்த அளத்தாலும் தனி எழுத்தாய்ப் பிரிந்து அளத்தாலும் எழுத்தின் இயல்பு மாறுவதில்லை. இச்சில மாறும் என்பது மட்டும் பின்னே கூறப்படுகின்றன.

சொல்லின் இடையில் வரும் அகர இகரம் ஐ போல ஒலிக்கும்

(எ-டு) வயிரம் - வைரம்.

சொல்லிடை வரும் அகர உகரம் ஔ போல ஒலிக்கும் (கௌதமன் - கொளதமன்)

சொல்லிடை அகரத்தின் பின் யகர ஒற்றை எழுதினாலும் ஐ எனும் நெட்டெழுத்துப் போல ஒலி ஒற்றுமை உண்டாகும். (ஐயர் - அய்யர்)

ஐ, ஔ இரண்டும் ஆராயுங்கால் மொழியிடையே ஒரு மாத்திரை மட்டுமே பெறுமிடமும் உண்டு.

முன்பு எழுத்து மயக்கமாய் வருமெனப்பட்ட இகரமும், யகரமும் சொல் இறுதியில் மயங்கி வரக்கூடும். சில சொல்லில் இ ஆகவும் சில சொல்லில் 'ய்' ஆகவும் வரலாகும் எனக்காட்டுவோம்.

(எ-டு) ஆய் – ஆயி, பாய் – பாயி

5. மொழி முதலெழுத்துக்கள்:

பன்னிரண்டு உயிரெழுத்தும் மொழிக்கு முதலாகும். தனிமெய்கள் மொழிக்கு முதலாகா. உயிரோடுகூடிய மெய்கள் மொழிக்கு முதலாம்.

- க், த், ந், ப், ம் என்ற ஐந்து மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிரோடு சேர்ந்து மொழி முதல் வரும். (எ-டு) கிளி, தந்தை, நிலம், பண்டை, மாலை.
- ச் என்னும் மெய் அ, ஐ, ஔ எனும் மூன்று நீங்கலாகப் பிறவற்றுடன் சேர்ந்து மொழிக்கு முதலாகும்.

(எ-டு) சாலை, சிலை, சீறுக, சுரும்பு, சூழ்க, செய்கை, சேவடி, சொறிக, சோறு.

REDMI NOTE 8 PRO

• 'வ்' எனும் மெய் உ,ஊ,ஒ,ஓ எனும் நான்கு நீங்கலாகப் பிற உயிருடன் மொழி முதலாகும்.
(எ-டு) வளை, வாளி, விளி, வீடு, வெள்ளி, வேர், வையம், வௌவல்.

• 'ஞ்' என்னும் மெய் ஆ,எ,ஒ என்னும் மூன்று உயிருடன் மொழி முதல் வருமென்பர். (எ-டு) ஞாலம், ஞெகிழி, ஞொள்கின்று.

• 'ய்' ஆ ஒன்றுடன் மட்டும் மொழி முதலாகும். (எ-டு) யாண்.

- நகரத்தை அடுத்து அதன்முன் நகரத்தைச் சேர்ந்து வரும் குற்றியலுகரம் மொழிக்கு முதலாகும். (எ-டு) நுந்தை.

• தொல் அதனால் அது குற்றியலுகரமாக உச்சரிக்கப்பட்டாலும் பொருள் வேறுபடாது என்பார்.

- எழுத்து நிலையால் இவற்றின் பெயர்களைக் கூறுமிடத்து முதலாகா என்று வரையறை செய்யப்பட்டவையும் மொழிக்கு முதலாக வரும் என்பதை

'முதலா ஏன தம்பெயர் முதலும்' (தொல் 66).

• இவ்வாறு தொல் கூற்றாக உரையாசிரியர் கூறும் மொழி முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை மொத்தம் - 24.

## 6. மொழி இறுதி எழுத்துக்கள்:

• உயிரெழுத்துக்களுள் ஔ எஞ்சிய பிற உயிர்கள் ஈற்றில் வரும்.
(எ-டு) வா, பலா, கிளி, குளி, பனை

• 'ஔ' ககர வகரத்துடன் மட்டும் ஈற்றில் வரும்.
(எ-டு) கௌ, வௌ.

• எகரம் மெய்களுடன் சேர்ந்து ஈறாகாது.

• 'ஒ'கரம் நகரத்தொடு மட்டும் ஈறாக வரும். ~~எ-டு~~

• ஏ,ஓ எனும் உயிர் ஞகர மெய்யோடு ஈற்றில் வருவதில்லை.

• உ,ஊ எனும் உயிர் ந,வ மெய்யோடு ஈற்றில் வருவதில்லை.

• 'சு' என்பது உசு, முசு என்ற இருமொழிக்கண் மட்டும் ஈறாய் வரும்.

• மெய்யெழுத்துகள் - ஞ்,ந்,ண்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள் ஆகிய பதினொன்றும் மொழிக்கு ஈறாகும்.

• நகரம் சகரம் போன்று இரு சொல்லல் ஈறாக வரும்.
(எ-டு) பொருந், வெரிந்.

• ஞகரம் பகரம் போன்று ஒரு சொல்லல் ஈறாக வரும்.
(எ-டு) உரிஞ்

• வகரம் அவ், இவ், உவ், தெவ் என்ற நான்கு சொற்களில் ஈறாகும்.

• மகர ஈறு மயங்காத னகர ஈற்று அஃறிணைச்சொற்கள் ஒன்பது.
(எ-டு) எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான்.

REDMI NOTE 8 PRO

# வினாக்கள்

1. மொழிமரபு பெயர்க்காரணம் கூறுக.
2. மொழிமரபு இல்லா எழுத்துக்களைக் கூறுக.
3. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் – விளக்குக.
4. குற்றியலுகரத்தின் வகைப்பாடு குறித்து எழுதுக.
5. குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும் யாவை?
6. ஆய்தம் மொழியில் இடம்பெறும் இடங்களை விளக்குக.
7. மொழி எத்தனை வகைப்படும்? அதனை விளக்குக.
8. சார்பெழுத்தின் நிலைகளை மொழிமரபு கொண்டு விவரி.
9. நீட்டம் வேண்டும் எழுத்துக்களின் வரிவடிவ நிலை யாது?
10. ஈ.றொற்று உடனிலையை விளக்குக.
11. 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' – விளக்குக.
12. மகரக்குறுக்கம் என்றால் என்ன?
13. தொல்காப்பியர் சுட்டும் போலி எழுத்துக்கள் யாவை?
14. உச்சகாரம், உப்பகாரம் குறிப்பு தருக.
15. மொழிக்கு முதலாகும் எழுத்துக்களை விவரி.
16. மொழிக்கு ஈ.றாகும் எழுத்துக்களை விவரி.
17. எழுத்துக்களின் இயக்கம் குறித்துத் தொல்காப்பியர் உரைப்பனவற்றைத் தொகுக.

---

REDMI NOTE 8 PRO
ந.மகாலட்சுமி